பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 23 திங்கட்கிழமை 06.05.2024 கதிர் 180

# சுதந்திரக் கட்சி காசுக்காக காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது

## கட்சியின் முன்னாள் செயலர் சீற்றம்

காசுக்காகச் சிறீ லங்கா சுதந்திரக்கட்சிகாட்டிக்கொடுக்கப் பட்டுள்ளதாக அதன் முன்னாள் பொதுச் செயலாளரும் மனித நேயக் கூட்டணியின் தலைவருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். கண்டியில்நேற்றுஇடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ☞2

## இனி அது ரகசியம் அல்ல!

ஏப்ரல் 30, உலக தொழிலாளர் நாளுக்கு முதல் நாளில் வவுனியா வாடிவீட்டில்கூடிய வடக்குகிழக்கைச் சேர்ந்தவை என்று சொல்லப்படும் பல தமிழ் சிவில் அமைப்புக்களும், தமிழ்த் தேசியச்செயற்பாட்டாளர்கள் பலரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று தீர்மானித்தார்கள்.

அந்தக் கூட்டத்தில்

ஜனாதிபதித்தேர்தலில்ஒருபொதுத் தமிழ்வேட்பாளரைநிறுத்துவதற்கான சிவில் சமூகத்தின் கூட்டுத்தீர்மானம் வணக்கத்துக்குரிய ஆயர், திருகோணமலை மறைமாவட்டம் தவத்திரு அகத்தியர் அடிகளார், தென்கைலை ஆதீனம் தவத்திரு வேலன்சுவாமிகள், சிவகுருஆதீனம் பேராசிரியர் கே ரி கணேசலிங்கம், தலைவர் அரசறிவியல்துறை யாழ். பல்கலைக்கழகம் கலாநிதி க. சிதம்பரநாதன், அரங்கச்செயற்பாட்டுக் குழு அருட்பணி த ஜீவராஜ், ஏசு சபை சமூக செயற்பாட்டாளர் மட்டக்களப்பு நிலாந்தன், அரசியல் ஆய்வாளர் அருட்பணி பி ஞானராஜ் (நேரு), மனித உரிமை செயற்பாட்டாளர் மன்னார் நீதி சமாதான ☞2

## ஓ.எல். பரீட்சைகள் இன்று தொடக்கம்

### 4.5 லட்சம் பேர் எழுதுகின்றனர்

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை இன்று முதல் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இம்முறை 3 லட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65 ஆயிரத்து 331தனியார்விண்ணப்பதாரர்களுமாக மொத்தமாக 4 லட்சத்து 52 ஆயிரத்து 979பரீட்சார்த்திகள்நாடளாவியரீதியில் 3,527 பரீட்சை நிலையங்களில் சாதாரணதர பரீட்சைஎழுதவுள்ளனர்.

இதேவேளை விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக விசேட பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## மே தினக் கூட்டங்கள் அரசிலானமை கவலை

### பொது ஜன பெரமுன தெரிவிப்பு

மேதினக்கூட்டங்கள் அரசியல் கூட்டங்களாக மாற்றமடைந்தமை கவலைக்குரியது என்று பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின்தலைமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

மே தின கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான கருத்துக்கள் மாத்திரம்வெளிப்பட்டதே தவிரதொழிலாளர்களின் உரிமை பற்றி எந்த அரசியல் கட்சி மேடைகளிலும் பேசப்படவில்லை.மேதினகூட்டம் அரசியல் கூட்டமாக மாற்றமடைந்துள்ளமை கவலைக்குரியது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை பொது ஜன பெரமுன ஜனாதிபதியிடம் பலமுறை முன்வைத்துள்ள போதும் ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. ☞2

## தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரட்ட ரெலோ தொடர்ந்து முயற்சி

### அதன் தலைவர் செல்வம் தெரிவிப்பு

தமிழ்க்கட்சிகள்அனைத்தையும் ஓரணியில் திரட்டும் முயற்சியில் ரெலோ தொடர்ந்துஈடுபடுகிறதுஎன்று ரெலோவின் தலைவரும் வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறிசபாரத்தினம் அவர்களின் 38 ஆவது அஞ்சலி நிகழ்வு நேற்றையதினம் அவர் படுகொலை செய்யப்பட்ட இடமான அன்னங்கை, கோண்டாவிலிலும் யாழ் ரெலோ அலுவலகத்திலும் இடம்பெற்றன. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரு அணியில் திரள்வதற்கானவாய்ப்பினை தமிழீழ விடுதலை இயக்கம் தொடர்ச்சியாகமேற்கொண்டு வருகின்றது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதத்தினையும் நாம் ஒன்றுபட்டே முன்னெடுத்திருந்தோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள்தொடர்பிலான பொதுவிடங்களை அனைத்துக் கட்சிகளுடனும் ஒற்றுமையாக முன்னெடுப்பதற்கான முயற்சிகளை எமதுஇயக்கம்தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

எங்களுடையதேசத்திலே எமது மண்ணுக்கும் எமது மக்களுக்கும் அரசியல் ரீதியாக தென்னிலங்கை சக்திகளால் இழைக்கப்படும் அநீதிகளை நாம் ஒற்றுமையாக இருந்தாலே எதிர்த்து முகங்கொடுக்க முடியும்.

நாம் ஒற்றுமை ☞2

## நாகப்பட்டினத்துக்கான கப்பல் சேவை குறித்து இந்தியத் தூதரகம் அறிவிப்பு

இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கும் யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறைக்கும்இடையிலானகப்பல்சேவைமே 13 ஆரம்பமாகலாமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரலாயம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த கப்பல் சேவையை தனியார் நிறுவனமே இயக்கவுள்ளது. இந்தியாவின் ஷிப்பிங்கோர்ப்பரேசனும் இலங்கை அரசாங்கமும் இணைந்து இந்த நிறுவனத்தை தெரிவு செய்துள்ளன.

இந்த சேவையை மலிவானதாகவும் பொதுமக்களுக்கு ஏற்ற விதத்திலும் வழங்குவதற்காக ஒரு வருட காலத்துக்கு மாதத்துக்கு 25மில்லியன்ரூபாய்க்கு மேல் பொருந்தும் இயக்கச் செலவை இந்திய அரசாங்கம் ஏற்க முடிவு செய்துள்ளது.

பயணிகள் கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறும் பயணிகளிடம் தற்போது அறவிடப்படும் வரியை குறைப்பதற்கு ☞8

## பிரபாகரன் உயிரோடு இருந்திருந்தால் பொது வேட்பாளர் பேச்சே இருந்திருக்காது

### அமைச்சர் டக்ளஸுக்கு வந்த ஞானம்

பிரபாகரன்உயிரோடு இருந்திருந்தால் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில்இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

சில தமிழ் கட்சிகள் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் பொது வேட்பாளர் என்ற கருத்தை தற்போது முன்னெடுத்து வருகின்றனர். இதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை. அது சரியானதும் நியாயமானதுமாக நான் கருதவில்லை.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்பவர்கள்தங்களதுசுயலாபங்களுக்காகதீராதபிரச்சினைகளாகவே கடைப்பிடித்து வந்தனர்.

அவர்கள் தமிழ் சமூகத்துக்கு ஏற்ற நடைமுறைக்கு சாத்தியமான யதார்த்த முடிவுகளைஎடுக்கவேண்டும். இந்த தமிழ் பொது வேட்பாளர்என்றவிடயம் அரசியல் உள்நோக்கம் கொண்ட சுயஇலாபம் கொண்டதாகும்.

அது ஜனாதிபதி ☞8

## கடல் கொந்தளிப்பால் மூழ்கிய காலி வீதி

கொழும்பு காலி வீதியில் அக்குரல முதல் தெல்வத்தைவரையான பகுதியில் நேற்று கடல் கடுமையாகக் கொந்தளித்ததால் வீதி நீரில் மூழ்கியது. இதனால் இவ்வீதியூடான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

வீதியை மூழ்கடித்த அலைகளுடன் அள்ளுப்பட்டு வந்த மணல் உள்ளிட்ட கழிவுகள் பின்னர் அப்பகுதி மக்களால் சுத்தப்படுத்தப்பட்டன.

இதேவேளை, பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம்எச்சரிக்கை விடுத்துள்ளது.

கற்பிட்டியிலிருந்து கொழும்பு,காலி,ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிரதேசங்களில்கடல் அலைகளின் உயரம் (2.5 -3.0) மற்றும் அலையின் கால அளவு (12-16)வினாடிகள் ☞8

## 9,000 படையினருக்கு முறையாக மன்னிப்பு

படைகளைவிட்டுத் தப்பியோடிய 9 ஆயிரம் பேருக்கு முறையானமன்னிப்புவழங்கப்பட்டுள்ளது. அவர்கள் தமதுபணிகளில்இருந்து உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆளும் தரப்பால் அறிவிக்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக் காலத்தில் தமது படைப் பிரிவுகளுக்குத் திரும்பி முறைப்படி தமது விடுகைப்பத்திரங்களை வழங்கியவர்களுக்கே மன்னிப் வழங்கப் பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பொது மன்னிப்புக் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. வரைவிடுமுறை கோராது ஏப்ரல் 20 வரை கடமைக்கு சமூகமளிக்காதபடையினருக்கு எதிர்வரும் மே 20 வரை தமது படைப் பிரிவுகளுக்குத் திரும்பி பொது மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

பொது மன்னிப்புக் ☞8

## கிராம அலுவலர்கள் 2 நாள் போராட்டம்

### சுகவீன விடுமுறையில் செல்கின்றனர்

நாடு முழுவதும் இன்று முதல் கிராம உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என்று அகில இலங்கை சுதந்திர கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயலாளர் ஜகத் சந்திரலால் தெரிவித்தார்.

''சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தபணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளனர்" என்றும் அவர் தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்கள் இரண்டு நாட்கள் சுகயீன விடுமுறையை அறிவித்துஇந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். இன்றும்நாளையும்அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆணைக்குழு யாழ். மறை மாவட்டம் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரழுச்சி இயக்கம் தமிழ் சிவில் சமூக அமையம் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் அறிவார் சமூகம், திருகோணமலை அகில இலங்கை மீனவர் மற்றும் விவசாய தொழிலாளர்களின் கூட்டமைப்பு கரைச்சி வடக்கு சமாசம் சமூக விஞ்ஞான ஆய்வு மையம் சிவில் அமைப்பு மட்டக்களப்பு தமிழ் ஊடகத் திரட்டு கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மாவட்ட கமக்காரர் அமைப்பு வவுனியா தமிழ் இளையோர் மக்கள் இயக்கம் தமிழர் கலை பண்பாட்டு மையம் எம்பவர் நிறுவனம் மக்கள் மனு வடக்கு கிழக்கு சிவில் சமூக குழு குரலற்றவர்களின் குரல் மயிலத்தமடு மாதவனை கால்நடை பண்ணையாளர் அமைப்பு சமூக மாற்றத்துக்கான அமைப்பு வவுனியா தமிழ் சமூக செயற்பாட்டாளர்கள் இணையம் திருகோணமலை புழுதி சமூக உரிமைகளுக்கான அமைப்பு திருகோணமலை நலிவுற்ற சமூகங்களின் அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பு, திருகோணமலை ஆகிய தனிநபர்களும் அமைப்புக்களும் பங்கெடுத்திருந்தன.

அந்தக் கூட்டத்தில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது, அதற்காக சிவில் சமூகமும் தமிழ் தேசிய கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது என்று தீர்மானிக் கப்பட்டது.

பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கும் ஏனைய நகர்வுகளை மேற்கொள்வதற்குமாக தனித் தனி உபகுழுக்களை நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது. அத்தோடு இந்த முடிவுகள் குறித்து அரசியல் கட்சிகளோடு பேசுவதற்காக எனவும் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவினர் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களைச் சந்தித்து பொது வேட்பாளர் குறித்துக் கலந்துரையாடினர். கடைசியில் இந்தச் சந்திப்புக்கள், முயற்சிகள் எல்லாம் தமிழ் அரசுக் கட்சியின் முடிவு தெரிந்த பின்னர் அடுத்த கட்டத்திற்கு நகர்வது என்ற அளவில் முடிவுக்கு வந்தன.

இந்த கலந்துரையாடலில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவைசோ.சேனாதிராசாவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், ஸ்ரீநேசன், சரவணபவன் உள்ளிட்டவர்களும், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரனும், புளொட் சார்பில் பவன் மற்றும் கஜதீபனும், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் சுரேஷ் பிரேச்சந்திரனும், துரைரத்தினம் கமலாகரனும் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரனும், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தாவும், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனும் அரசியல் தரப்புகள் சார்பில் கலந்துகொண்டிருந்தனர்.

மறுதரப்பில் வேலன் சுவாமிகள், திருமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல், பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் பத்தி எழுத்தாளர்களான யோதிலிங்கம், நிலாந்தன், யதீந்திரா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

வவுனியாவில் தாங்கள் கூடி எடுத்த முடிவு குறித்து சிவில் அமைப்புக்கள் என்று கூறப்படுபவற்றின் பிரதிநிதிகள் அரசியல் கட்சிகளின் தலைவர் களுக்கு எடுத்துக் கூறினர். பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் கட்சிகளும் ஏனையவர்களும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பிலும் பேசப்பட்டது.

எனினும் பொது வேட்பாளர் விடயத்தைக் கொள்கை அளவில் தாம் ஏற்றுக்கொள்கிறார் என்று தெரிவித்த தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கட்சியின் இறுதி முடிவை அதன் மத்திய குழுக் கூட்டத்தினைக் கூட்டிய பின்னர்தான் தெரிவிக்க முடியும் என்று கூறினார். கட்சியின் முடிவைத் தெரிந்துகொள்வதற்காக 2 வார கால அவகாசம் தரும்படியும் கேட்டுக்கொண்டார். அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர், ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை களமிறக்குவதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களை மையப்படுத்திய பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்காக முன்மொழிவு செய்யப்பட்டது. குறித்த கட்டமைப்பை வினைத்திறனுடன் உருவாக்கும் வகையில் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்துவதற்காகப் பதினொருவர் கொண்ட குழுவும் அங்கு உருவாக்கப்பட்டது. இனி அவர்கள் அனைத்துத் தரப்பினருடனும் பேசி இறுதி முடிவுகளை எடுப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இதுபோன்ற ஒரு முயற்சியாகவே தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டது. 2015 தேர்தல் முடிந்த கையோடு அந்த அமைப்பு உதயமானது. எனினும் அது அப்போதைய வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனைத் தலைமையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி தவிர, அதற்கெதிரான அனைத்துக் கட்சிகளும் அதில் அங்கத்துவம் வகித்தன. கடைசி யில் அந்த அமைப்பை தமது அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்துவதற்குச் சில தரப்புக்கள் போட்டி போட்டதுடன் அதன் ஆயுள் காலம் முடிந்துபோனது.

இப்போதும் அதுபோன்று நடந்துவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் என்று சொல்லப்படுபவற்றின் பிரதிநிதிகள் முயற்சிக்கிறார்கள். அதனாலேயே எந்தவொரு அரசியல் தரப்பினரையும் இதில் முன்னிலைப்படுத்தாமல் காரியமாற்ற அவர்கள் முற்படுகின் றனர். இதற்கு அரசியல் கட்சிகள் எந்தளவுக்கு ஒத்துழைக்கும்? இந்தக் கட்டமைப்பை தமது தேர்தல் அரசியலுக்குப் பயன்படுத்தாமல் அரசியல் கட்சிகள் நேர்மையாக நடந்துகொள்ளுமா? தமிழ் அரசுக் கட்சி பொது வேட்பாளர் தெரிவை நிராகரித்தால் அதன் பின்னர் இந்தக் கட்டமைப்பின் செயற்பாடு எப்படிப்பட்டதாக அமையும்? அது தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூ-ட்டணிக்கு ஆதரவான கட்டமைப்பாக வளர்த்தெடுக்கப்படுமா? என்று பதில் தரப்படவேண்டிய கேள்விகள் ஏராளம் உண்டு. பொறுத்திருப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சுதந்திரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

செயலாளர் பதவியிலிருந்து என்னை நீக்கியமை குறித்து நான் கவலையடைவில்லை. ஆனால் கட்சிக்கும் எனக்குமிடையிலான பிணைப்பை முற்றாக இல்லாமலாக்கும் வகையில் எனது உறுப்புரிமையும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பறிக்கப்பட்டமையே வேதனையளிக்கிறது. எவ்வாறிருப்பினும் எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிமன்றத்தின் ஊடாக நீதி கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

கட்சியின் அங்கத்தவர்கள் அல்லாத ஒருவர் தற்போது பதில் தவிசாளராக நியமிக்கப் பட்டிருக்கின்றார். மலைநாட்டு ஒப்பந்தத்தின் மூலமே எமது நாடு காட்டிக் கொடுக்கப்பட்டது. அதே போன்று தற்போது மலைநாட்டு பகுதியில் உள்ள ஒருவரால் சுதந்திர கட்சியும் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவரே புதிய தவிசாளருக்கான பெயரை முன்மொழிந்துள்ளார்.

பதில் தவிசாளராக நியமிப்பதற்கு சுதந்திர கட்சியில் வேண்டியளவு சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் இன்று காசுக்காக கட்சி காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மே தினத்தன்று விஜேதாச ராஜபக்சவே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பளர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஆனால் அவரால் அவ்வாறு தனித்து தீர்மானம் எடுக்க முடியாது.

அரசியல் குழு கூட்டம் கூடி தீர்மானம் எடுக்கப்பட்டு, அந்த தீர்மானம் மத்திய குழுவில் நிறைவேற்றப்பட்ட பின்னரே இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியும். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அவ்வாறு கூறினாலும், விஜேதாச ராஜபக்ச தான் இது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை எனக் கூறுகின்றார். எவரிடமாவது பணம் இருக்கிறது என்பதற்காகவும், அமைச்சுப்பதவி இருக்கிறது என்பதற்காகவும் அவருக்கு ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க வாய்ப்பளித்தால் இது நியாயமான தல்ல என்றார்.

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்லாது செயற்ப டுகின்றபோது தமிழ்த் தேசத்தின் பூர்வீகமான மக்கள் தமிழ் மக்கள் அல்லர் என்று கூறுவதற்கான அபாயகரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன என்றார்.

## மே தினக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்தும் சூழல் காணப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தகைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக ஆளும் தரப்பை ஸ்தாபிப்பது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

பொது ஜன பெரமுனவை பலப்படுத்தும் பொறுப்பு கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் கட்சிக்குள் இணைத்துக் கொள்ளுமாறு கட்சியின் தலைவர்கள் மற்றும் தேசிய அமைப்பாளரிடம் வலியுறுத் தியுள்ளேன்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச இவ்விடயம் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பேச்சு நடத்தியுள்ளார். கட்சியில் இருந்து விலகிச் சென்ற சிரேஷ்ட உறுப்பினர்களை மீண்டும் இணைத்துக் கொண்டு ஒன்றிணைந்து செயற்பட்டால் பொது ஜன பெரமுன தலைமையில் பலமான ஆளும் தரப்பை ஸ்தாபிக்கலாம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் கண்டுபிடிக்கப்பட் கொல்களம்: 21 மாடுகள், 4 ஆடுகள் உயிருடன் மீட்பு

## ஒரு தொகை இறைச்சியும் கைப்பற்றல்!

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத கொல்களம் ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு, 21 மாடுகளையும் 04 ஆடுகளையும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன் , ஒரு தொகை இறைச்சியும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஒஸ்மானிய கல்லூரிககு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மாடு , ஆடுகள் இறைச்சியாக்கப்படுவதாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவ்விடத்தை சுற்றி வளைத்தனர்.

அதன்போது குறித்த கட்டடத்தில் இறைச்சியாக்கிக் கொண்டிருந்த நபரைக் கைது செய்ததுடன், இறைச்சிக்காகக் கொண்டு வரப்பட்டிருந்த 21 மாடுகள் மற்றும் 04 ஆடுகளை உயிருடன் மீட்டுள்ளதுடன், ஒரு தொகை இறைச்சி மற்றும் இறைச்சியாக்க பயன்படுத்திய கோடாரி , கத்திகள் உள்ளிட்டவற்றையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். யாழ்பபாணத்தில் பல இடங்களில் ஆடு , மாடுகள் கடத்தப்படுகின்றன என பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் உள்ள நிலையில், உயிருடன் மீட்கப்பட்ட ஆடுகள், மாடுகள் களவாடப்பட்டவையா என பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)




# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் புத்தளத்தில் ஒருவர் கைது

புத்தளம், நாகவில்லு பகுதியிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட்டுகளைக் கொண்டு செல்ல முயன்ற ஒருவர் புத்தளம் பிராந்திய போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பிராந்திய போக்குவரத்து பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய புத்தளம் பாலாவி பகுதியில் வைத்து சந்தேக நபரின் மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனைக்குட்படுத்திய போதே இந்த சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 4 பண்டல்கள் அடங்கிய 40 பெட்டிகளில் 800 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்படப்பட்டுள்ளன.

புத்தளம், தில்லையடி பகுதியைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரும் கைப்பற்றப்பட்ட சிகரெட் பெட்டி, மோட்டார் சைக்கிளும் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# கற்பிட்டியில் ஹஜ் பெருநாள் ரேஸ் நடத்துவதற்கு கே.ஆர்.சீ அமைப்பு





(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி நகரில் ஆரம்ப காலங்களில் தொடராக முஸ்லிம்களின் பெருநாள்களை சிறப்பிக்கும் முகமாக கற்பிட்டி புதுக்குடியிருப்பு தேத்தாவாடி கிராமத்தில் அமைந்துள்ள ரேஸ் தரவையில் இடம்பெற்று வந்த பாரம்பரிய பெருநாள் விளையாட்டுக்களுடன் மாபெரும் மோட்டார் சைக்கிள் ரேஸ் போட்டி நிகழ்வுகள் கடந்த சில வருடங்களாக நடைபெறவில்லை. இதனை கருத்தில் கொண்டு கற்பிட்டியின் னபாரம்பரியத்தை நிலைநாட்டும் நோக்கோடு கற்பிட்டி ரேஸ் குழு (கே.ஆர்.சீ) அமைப்பு ஒன்றை உருவாக்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை இரவு கற்பிட்டி ஸ்மாட் கல்லூரியில் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஜே.எம் தாரீக் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது எதிர்வரும் ஹஜ் பெருநாளைக்கு அடுத்த தினம் கற்பிட்டி தேத்தாவாடியில் உள்ள ரேஸ் தரவையில் கற்பிட்டியின் பாரம்பரிய பெருநாள் விளையாட்டுக்களுடன் மாபெரும் மோட்டார் சைக்கிள் ரேஸ் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இதில் வெற்றி பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசுப் பொருள்கள் மற்றும் ரொக்க பணம் என்பன வழங்கப்பட வேண்டும் எனவும் இதனை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு கற்பிட்டி மக்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# சட்டவிரோத வெளிநாட்டு சொக்லேற் விற்றவருக்கு ரூ. ஒரு லட்சம் தண்டம்

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு சொக்லேட்கள் மற்றும் பிஸ்கட் என்பவற்றை விற்பனை செய்தவருக்கு ஒரு லட்சம் ஷரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை பொது சுகாதார பரிசோதகர்களான கு. பாலேந்திரகுமார் மற்றும் கி,அஜந்தன் ஆகியோர் ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதன்போது முறையான விதத்தில் இறக்குமதி செய்யப்படாத மற்றும் நிறக்குறியீடு இல்லாத வெளிநாட்டு சொக்லேட் வகைகள் , பிஸ்கட்டுகள் மற்றும் இனிப்பு பண்டங்கள் என்பவற்றை மீட்டு இருந்தனர்.

அதனை அடுத்து உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து , வழக்கு விசாரணைகளில் உரிமையாளர் குற்றங்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து , அவரை கடுமையாக எச்சரித்த மன்று ஒரு லட்சம் ரூபா தண்டம் அறவிட்டது. (05)

# இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியில் 'நயனம்' நூல் வெளியீட்டு நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்விவலய கமு/ கமு/ இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கா.பொ.த (சா/த) மாணவர் தின நிகழ்வு பகுதி தலைவர் இசட்.எம்.நூறுல் அமீன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாகப் பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத்தும் கௌரவ அதிதிகளாக பாடசாலையின் பிரதி அதிபர் எம்.எச்.எம்.ஜிப்ரியும் எம்.ரீ.எம்.முனாப் மௌலவியும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த விழாவில் கா.பொ.த (சா/த) மாணவர் தின நிகழ்வை முன்னிட்டு கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் 'நயனம்' என்றும் நூல் வெளியிடப்பட்டதுடன் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# காதலியின் தந்தை உள்ளிட்டவர்களால் இளைஞன் ஒருவர் கடத்தித் தாக்குதல்

## கடத்தலுக்குப் பயன்படுத்திய வான் ஹெட்டிபொலவில் மீட்பு

குளியாபிட்டிய பிரதேசத்தில் வைத்து இளைஞரைக் கடத்த பயன்படுத்திய வான் சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த வான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வில்கமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெட்டிபொல நகரில் இந்த வான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இந்த வானை ஹெட்டிபொல நகரில் கைவிட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேற்படி இளைஞன் கடந்த 22 ஆம் திகதி தனது காதலியைப் பார்ப்பதற்காக காதலியின் வீட்டிற்குச் சென்ற நிலையில் காணமல்போனாக தகவல் வெளியானது. காதலியின் தந்தை மற்றும் பலர் இணைந்து இளைஞனை வானில் கடத்திச் சென்று வீடொன்றில் வைத்து அடித்துப் பல மணித்தியாலங்கள் மறைத்து வைத்திருந்தமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (05)

# அம்பாறை குருகுலத்தில் நாவுக்கரசர் குருபூஜை





( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் நாவுக்கரசர் பெருமானுடைய குரு பூசை தினம் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. விநாயகபுரத்தில் அமைந்துள்ள குரு குல இல்லத்தில் அதன் ஸ்தாபகர் பணிப்பாளர் கண.இராசரெட்ணம் தலைமையில் குருபூஜை இடம் பெற்றது.

போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் பரிசு வழங்கப்பட்டது.

அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அக்கறையுடன் செயற்படுவோம்

தொழில்நுட்பம் மனித –குலத்திற்கு எவ்வளவு வரப் பிரசாதமோ அந்தளவுக்குக் கெடுதலையும் தருகிறது. இலங்கையில் 10 இலட்சம் வரையான குழந்தைகள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகியுள்ளனர் என்கிற அதிர்ச்சிகரமான செய்தியை வெளியிட்டுள்ளனர் குழந்தைகள் மனநல சிறப்பு வைத்தியர்கள். அவர்களை அதிலிருந்து மீட்பதற்குப் பெற்றோர்களின் உதவி தேவை என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கையடக்கத் தொலைபேசிகளுக்கு எல்லையற்ற விதத்தில்அடிமையாகியுள்ளகுழந்தைகளைஅதிலிருந்து மீட்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான உதயகுமார அமரசிங்க தெரிவித்திருக்கிறார். அது நல்ல முயற்சிதான். அதற்குப் பெற்றோர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்தச் சமூகமும் ஒத்துழைப்பும் ஆதரவும் தரவேண்டும்.

கையடக்கத் தொலைபேசிகளில் அதிகளவில் நேரத்தைக் கடத்துவது சிகிச்சை பெறவேண்டிய ஒரு மனநோய் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

இவ்வாறு கையடக்கத் தொலைபேசிகளில் அதிகளவில் நேரத்தைக் கடத்துவதால் குழந்தைகள் கண் பார்வையில் பிரச்சினை, மனநிலைப் பாதிப்புகள் போன்ற பல நோய்களுக்கு ஆளாக நேரிடும் என்று மருத்துவர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றார்கள். அப்படி இருப்பினும் அதன் மீது கவனம் செலுத்தாத பெற்றோர்களின் அக்கறையீனம் காரணமாக இன்று ஒரு மில்லியன் வரையான குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கவலைக்குரியது.

தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும்போது அவற்றின் பாதகங்களை அறிந்துகொண்டு அதற்கேற்ப அவற்றைக் கையாளத் தெரிந்திருக்க வேண்டியது, விழிப்புணர்வு அடைந்திருக்க வேண்டியது முக்கியமானதாகும்.

‘முதலில் கையடக்கத் தொலைபேசிகளில் விளையாட்டுக்களுக்குமாத்திரம்மட்டுப்படுத்தப்பட்டிருந்த அநேக குழந்தைகள் தற்போது யூடியூப், இன்ஸ்டாகிராம், முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களுக்கும் அதிகளவில் அடிமையாகியுள்ளனர்” தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான உதயகுமார அமரசிங்க தெரிவிக்கின்றார். ”போனில் படம் பார்க்கிறார்கள்” என்று இதைக் கண்டும் காணமலும் பெற்றோர்கள் கடந்து செல்வதே இதற்கு மூலகாரணம் என்கிற குற்றச்சாட்டுகள் பல பக்கங்களில் இருந்தும் எழுகின்றன.

இந்த கைப்பேசிப் பயன்பாடு பிள்ளைகளை நேரடியாகப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், சமூக ரீதியிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. பிள்ளைகளுக்குத் தமது பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் காணப்பட்ட தொடர்பு துண்டிக்கப்பட்டு அவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இது பல விபரீத விளைவுகளுக்கும் வழிவகுக்கின்றது. வன்முறைமிக்கவர்களாக அவர்களை மாற்றுகின்றது என்றும் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து பிள்ளைகள் மீது அக்கறை செலுத்தி அவர்களின் வருங்காலத்தை செழுமைப்படுத்துவதில் ஒவ்வொரு பெற்றோரும் அக்கறையுடன் செயற்படவேண்டியது அவசியம்.



# குழந்தைகளை யார் வளர்க்க வேண்டும்?

என்.மாதவன்



குழந்தை வளர்ப்பு முறைகள் காலந்தோறும் மாற்றம் அடைந்துவருகிறது. மாற்றம் அடைந்து வருகிறது என்பதைவிட பெற்றோர்களின் கனவுகளுக்கு ஏற்ப அவர்கள் குழந்தைகளை வளர்க்கும் விதத்தை மாற்றி அமைத்துவருகிறார்கள். ஆனால், உண்மை என்னவென்றால் குழந்தைகள் அவர்களாகவே வாழ்கிறார்கள். வளர்கிறார்கள். அவர்களாகவே எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

அடிப்படையில் எந்த ஒன்றையும் பிறர் செய்ய நாம் பயிற்றுவிக்கவே முடியாது. அவ்வாறு அவர்கள் பயில்வதற்கான சூழ்நிலையை எளிதாக்க மட்டுமே இயலும். கல்விக்கூடங்களும் பெரும்பாலும் இந்தப் பணியைத்தான் செய்துகொண்டிருக்கின்றன.

### பள்ளிக்கு மகிழ்ச்சியாக செல்கிறார்களா?

உலகம் முழுக்க பெற்றோர்களின் கனவுகளின் வீச்சு அதிகரித்து வருகிறது. இவ்வாறு அதிகரிப்பதற்கு ஏற்ப அவர்களது குழந்தை வளர்ப்பு முறைகளில், குழந்தைகளைக் கண்காணிப்பதில், கண்டிப்பதில் தீவிர கவனம் செலுத்துவோராக மாறிவருகின்றனர். ஒரு விஷயத்தை நாம் எளிதில் மறந்துவிடுகிறோம். அதாவது, ஒருவர் கற்றுக்கொள்கிறாரா என்ற மதிப்பீட்டை வெளியில் இருந்து ஒருவர் செய்வதைவிட கற்பவரே செய்துகொள்வதே சாலச் சிறந்தது.





மேலும் எந்தவொரு கற்றல் செயல்பாட்டிலும் கற்போரின் மகிழ்ச்சியை உத்தரவாதப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அவ்வாறு மகிழ்ச்சியை உத்தரவாதப்படுத்தக்கூடிய எந்தப் பணியை யாரும் வெளிப்புறத்திலிருந்து செய்ய வேண்டியதில்லை. உதாரணமாக எந்தவொரு திருமண நிகழ்விற்கும், காதுகுத்தும் விழாவிற்கும், கோயில் திருவிழாவிற்கும் யாரும் வருத்தத்துடன் புறப்படுவதில்லையே, ஏன்? அவர்களுக்கான மகிழ்ச்சி அங்கே குவிந்திருப்பதை அவர்கள் அறிந்திருப்பதே இதற்குக் காரணம்.

மகிழ்ச்சியோடு இவ்விடங்களுக்குச் செல்லும் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்ல எவ்வளவு தூரம் மகிழ்ச்சியைக் காட்டுகிறது? இதனை நாம் மதிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறு மதிப்பீடு செய்வது எளிதான செயல்பாடு அல்ல. மேலும் சில கேள்விகளைக் கேட்டுப் பதில்களை வரவழைப்பதும் சரியான செயல்பாடு அல்ல. இயல்பாக ஒரு தேர்வு நடத்துவதுபோல் உனக்குப் பள்ளிக்கூடம் போகப் பிடிக்கிறதா? ஆசிரியரைப் பிடிக்கிறதா? இவ்வாறான கேள்வி பதில் முறையில் அந்த மதிப்பீட்டினை நிகழ்த்திவிட முடியாது.

பள்ளிக்கூடம் என்று நாம் சொல்லும்போதோ, அல்லது ஒரு ஆசிரியர் பெயரைச் சொல்லும்போதோ அந்தக் குழந்தைக்கு எப்படிப்பட்ட முகமாற்றங்கள் ஏற்படுகின்றன?

எவ்வளவு ஆர்மாக அவர்கள், அவர்களுடைய வகுப்பறையைப் பற்றியோ அல்லது பாடசாலையைப் பற்றியோ உரையாடலை தொடர் விரும்புகிறார்கள்?

தொடர் விடுமுறை என்னும்போது அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்களா? அல்லது அவர்கள் பாடசாலை நேரத்தை இழப்பதாக பார்க்கிறார்களா?

இப்படியான பல்வேறு மதிப்பீடுகளைக் கொண்டு ஒரு பள்ளியானது (5ஆம் பக்கம் பார்க்க..)



காலைக்கதிர் Kalaikkathir

# அடுத்த முறையும் ரணில்தான் ஜனாதிபதி மே தினக் கூட்டம் அதை நிரூபித்துள்ளது

## ஐ.தே.கட்சி அமைப்பாளர் லொயிட்ஸ் ஆதம்லெப்பை நம்பிக்கை

(எம்.எப்.றிபாஸ்)



அடுத்த முறையும் ரணில் விக்ரமசிங்கதான் ஜனாதிபதி என்பதை, ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் திரண்ட மக்கள் வெள்ளம் நிஷரூபித்துள்ளதாக, அந்தக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் யூ.கே. ஆதம்லெப்பை தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கும் நிலையில், அந்தக் கட்சியின் பிரதான மே தினக் கூட்டத்தில் - பெரும் எண்ணிக்கையிலான மக்களைத் திரட்டி, வெற்றிகரமானதொரு கூட்டத்தை நடத்தியமை, அந்தக் கட்சிக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏனைய கட்சிகளில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற போதும், ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தைப் போன்றதொரு, மக்கள் திரள் நிரம்பிய வெற்றிகரமானதொரு கூட்டத்தை நடத்திக் காண்பிக்க - அவர்களால் முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனது தொகுதியிலிருந்து சுமார் 400 ஆதரவாளர்களுடன் கொழும்பில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவித்த அமைப்பாளர் ஆதம்லெப்பை, 'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க - மீண்டும் ஜனாதிபதியாவார் என்பதற்கு, நடந்து முடிந்த மே தினக் கூட்டம் சான்று பகர்ந்துள்ளது. - எனவும் கூறினார்.

பொருளாதாரத்தில் வீழ்ந்து கிடந்த நாட்டை குறுகிய காலத்துக்குள் மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால்தான், இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாடு சிக்கலில் மாட்டிக் கொண்ட போது, அதனைப் பொறுப்பெடுப்பதற்கு அச்சப்பட்டு விலகியோடிய அரசியல்வாதிகளுக்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பற்றி விமர்சிப்பதற்கு எந்தவிதத் தகுதிகளும் கிடையாது என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் ஆதம்லெப்பை மேலும் தெரிவித்தார். (05)

# குழந்தைகளை.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குழந்தைக்கு மகிழ்வான இடமாக இருக்கிறதா என்பதை நாம் முடிவுசெய்ய வேண்டும்.

### நடைமுறை என்ன?

இயல்பில் என்ன நடைபெறுகிறது? பல விஷயங்களுக்கு, பல வேலைகளுக்கு நாம் ஒப்பந்தம் செய்வதுபோல ஒரு பாடசாலையைக் குழந்தையின் கற்றலுக்கான ஒப்பந்ததாரராக பாடசாலைகளை மாற்றி அங்கு இருக்கக்கூடிய ஆசிரியரை ஒரு ஒப்பந்தக்காரராக மாற்றிவிட்டால் தங்களுடைய பணி தீர்கிறது என்ற வகையில் பெற்றோர்கள் தங்களது கடைமைகளை நிறைவுசெய்கின்றனர். பலரும் விரும்பக்கூடிய ஒரு ஒப்பந்ததாரராக இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் நாம் குழந்தைகளைச் சேர்த்துவிடுகிறோம். அவர்களும் தான் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு ஏற்ப குழந்தைகளைப் பயிற்றுவிக்க விரும்புகிறார்கள்.

உண்மையில் குழந்தைக்கு தனது கற்றலை எவ்வாறு மதிப்பீடு செய்துகொள்வது என்பதைப் பயிற்றுவிக்க வேண்டும். தங்களைத் தாங்களே மதிப்பீடு செய்துகொள்வதற்கான ஆர்வம் அவர்களுக்கு உண்டாக வேண்டும். அதுபோலவே ஆசிரியர்களுக்கும் அவர்களது கற்பித்தல் திறன் மீதான மதிப்பீடு நடைபெற வேண்டும். நேற்று நடத்தியது எவ்வாறு குழந்தைகளுக்குப் புரிந்தது? இன்று நாம் இந்த விஷயத்தை எப்படிச் சொல்லப்போகிறோம்? இதற்கான தயாரிப்பும் தேவையாகிறது.

மேலும் 40 குழந்தைகள் உள்ள வகுப்பறையில் ஓர் ஆசிரியர் ஒவ்வொரு குழந்தையையும் தனிப்பட்ட கற்போராக பார்ப்பது மிகவும் அவசியமானதாக இருக்கிறது. இந்நிலையில் ஒவ்வொரு குழந்தை பற்றிய ஒரு மதிப்பீட்டை ஆசிரியர் வைத்திருப்பது அவசியம். ஆனால், அதேநேரத்தில் 40 குழந்தைகளின் பெற்றோர்களால் அந்தக் குழந்தையின் பலம் பலவீனங்களைத் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களிடம் பகிர்வது என்பது எளிமையான செயலாகவே இருக்கும்.

40 பேரையும் பார்த்து ஆசிரியர் புரிந்து கொள்ள ஆகும் நேரத்தைவிட தன் குழந்தையை ஒரு பெற்றோர் எளிதாக மதிப்பீடு செய்துவிட முடியும். ஆனால், இவ்வாறான மதிப்பீடு என்பது முறைப்பாடு போன்ற இயந்திரகதியாக நடக்காமல் குழந்தைகளுக்கு எதிரே அவர்களுடைய பாராட்டத்த விஷயங்களை சொல்லிவிட்டு, ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டிய விஷயங்களைத் தனியாக சொல்லிவிட்டு வர வேண்டும்.

### ஆசிரியர்களும் பெற்றோர்களும்

இது ஏதோ பார்ப்பதற்கு ஒரு கடினமான செயல்போலத் தோன்றலாம், ஆனால் உண்மையில் ஒரு குழந்தை நன்றாக வளர்ந்து நல்ல மதிப்பீட்டுத் திறன் அடைந்து ஒரு நல்ல தொழிலில் அவர்கள் பிரகாசிக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு அவர்கள் 20ஆவது வயதுகளில் தயாராகத் தொடங்குவது என்பது அந்தக் குழந்தைக்கும் பாரமாக இருக்கும். அந்த மாணவனைப் பயிற்றுக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பாரமாக இருக்கும்.

அதற்கு பதிலாக ஒரு குழந்தையின் நடத்தையில் ஆரோக்கியமான மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான பணியை ஆசிரியர்களிடம் மட்டும் விட்டுவிடாது பெற்றோர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காலம் கனிய வேண்டும்.

நல்வாய்ப்பாக என்று கூறிய பெற்றோர் பெரும்பாலும் தொடக்க நிலைக் கல்வியையோ அல்லது இடைநிலைக் கல்வியையோ படித்துள்ளார்களாக இருப்பதால் இந்த விஷயத்தை அவருடைய வாழ்வு அனுபவத்தின் அடிப்படையில் புரிந்துகொண்டு உதவி செய்ய வர இயலும். இது ஒரு வகையில் சுயநலமாக அவரவர்களது குழந்தை வளர்ப்பு என்ற சுயநலம்போலப் பார்த்தாலும்கூட இதன் மூலம் உருவாகும் சூழலால் பல நல்ல குடிமகன் ஃ குடிமகள் இந்த நாட்டிற்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

அப்படிப்பட்ட புனிதமான செயலாக குழந்தை வளர்ப்பை இந்தச் சமூகம் அணுக இவ்வாறான புரிதல்களைக் காலந்தோறும் விதைத்துக்கொண்டிருப்பதே நமது கடமையாகட்டும். குழந்தைகளைச் சமூகமே சேர்ந்து வளர்க்கும் காலம் விரைவில் கனியட்டும்.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பும்



(எம்.எம்.ஜெஸ்மின்)

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நசார் தலைமையில் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் ,மெற்றோபொலிடன் கல்லூரியின் ஸ்தாபகரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



இதன் போது இப்பாடசாலைக்கு அவசர தேவையாக இருந்த ஒரு கனணியும் ஒரு பிரின்டிங் மெசினையும் இதன்போது கலாநிதி. சிராஸ் மீராசாஹிப் அவர்கள் பாடசாலைக்கு வழங்கி வைத்தார்கள். குறித்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு முன்னாள் முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

தான் கற்ற ஆரம்ப பாடசாலைக்கு தன்னாலான சகல உதவிகளையும் செய்து தருவதாக உறுதி வழங்கியதோடு , குறித்த பாடசாலையின் அதிபர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இப்பாடசாலையின் பேண்ட் வாத்திய குழு மாணவர்களுக்கான புதிய சீருடையையும் மிக விரைவில் தயார்படுத்தி தருவதாக உறுதியளித்தார்.(05)

# தகவல் அறியும் சட்டம் சம்பந்தமாக திருகோணமலையில் செயல் அமர்வு

(எச் எம் ஹலால்தீன் )

திருகோணமலையில் தகவல் அறியும் சட்டம் சம்பந்தமான செயல் அமர்வு சனிக்கிழமை காலை தனியார் ஹோட்டலில் இடம்பெற்றது.

இச்செயல் அமர்வில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட, பிரதேச ஊடகவியலாளர்கள்,ஊடக ஆர்வலர்கள்,சிவில் செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வை விடியல் இணையத்தளம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் தகவல் உரிமை சட்டத்தின் பிரகாரம் அரச திணைக்களங்கள், அதிகார சபைகளிடம் இருந்து கோரிக்கை அனுப்பி எவ்வாறு தகவல்களை பெறலாம் மற்றும் தகவல் ஆணைக்குழு உள்ளிட்ட விண்ணப்பங்கள் தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டன.

தகவல் அறியும் சட்டத்தில் எவ்வாறு விண்ணப்பங்களை நிரப்புவது எவ்வாறு அதனை எழுதுவது முதலான விடயங்களும் வளவாளரால் தெளிவுபடுத்தப்பட்டன. இந் நிகழ்வுக்கு வளவாளராக விடியல் இணையத்தளத்தின் பிரதம ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான றிப்தி அலி கலந்து கொண்டார்.

இதில் பிரதேச ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், சமூக வலைத்தள ஆர்வலர்கள் உள்ளிட்ட சுமார் 30 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (05)

# கொள்ளைச் சம்பவம் தொடர்பில் 2 பொலிஸ் சார்ஜன்ட்கள் கைது

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தகர் ஒருவரின் வீட்டில் சுமார் இரண்டு கோடி ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளதுடன், இந்த சம்பவம் தொடர்பில் கைதான சந்தேகநபர்கள் நால்வர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பில் மற்றொரு சப்-இன்ஸ்பெக்டர் குறித்தும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

மேலும், இந்த வர்த்தகரின் விமான உரிமத்தை திருடி அவரை மிரட்டி , நான்கு கோடி ரூபா பணம் பறிக்க முயன்றுள்ளனர்.

இந்த தொகையை ஒரு கோடியாக குறைக்க இவர்களுக்கு உடன்பாடு ஏற்பட்டதையடுத்து, இந்த பணத்தை வர்த்தகர் வழங்க சென்ற போது சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)



## நாகப்பட்டின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

காங்கேசன்துறைதுறைமுகத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் 63.35 மில்லியன் டொலர்களை உதவித்தொகையாக வழங்க தீர்மானித்துள்ளது. முன்னர் இந்த நிதியை கடனாக வழங்கவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் முன்னேற்றம் செழிப்புக்கான அதன் பயணத்துக்கான இந்தியாவின் வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் விதத்திலேயே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

ஜூலை 2023இல் இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது கூட்டாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார பங்காளித்துவத்துக்கான தொலைநோக்கு ஆவணத்தின் முக்கிய அங்கமாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்சார் இணைப்பை வலுப்படுத்துதல் முக்கிய அம்சமாக காணப்படுகின்றது.

கப்பல் சேவையை மீண்டும் தொடங்குவது இந்திய அரசின் மக்களை மையமாகக் கொண்ட கொள்கைகளை உறுதிப்படுத்துவதாகும். ஒக்டோபர் 2023இல் இந்த சேவையை அறிமுகப்படுத்தியபோது பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது கருத்துக்களில் இணைப்பு என்பது இரண்டு நகரங்களை நெருக்கமாகக் கொண்டுவருவது மட்டுமல்ல, நாடுகளையும் அதன் மக்களையும் நெருக்கமாகக் கொண்டுவருவதாகும். 2023 செப்டெம்பர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள பு20 உச்சிமாநாட்டின்போது ஆரம்பிக்கப்பட்ட இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தின் மூலம் இலங்கை மக்கள் பயனடைவார்கள் என்றுள்ளது.

## 9,000....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தின் போது 9,770 பேர் படைகளில் இருந்து விலகியுள்ளனர் என்றும் மேலும், 9,735 இராணுவ வீரர்கள் அந்தந்த முகாம்களிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விடுமுறை கோராது கடமைக்கு சமூகமளிக்காத வெளிநாட்டிலுள்ள 35 இராணுவ வீரர்களும் இராணுவ சேவையில் இருந்து உத்தியோகபூர்வமாக நீக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## பிரபாகரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய மூன்று வேட்பாளர்களுடன் எமது மக்களது பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடி, அதன் பின்பு ஓர் உத்தரவாதத் தினை ஏற்படுத்திக்கொள்ள நாம் அவர்களை இணங்கவைக்க வேண்டும். பொது வேட்பாளர் என்பது ஒரு பொய்த்தனம். பிரபாகரன் உயிரோடு இருந்திருந்தால் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்றார்.

## கடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக அது நேற்றுத் தெரிவித்திருந்தது.

அத்துடன், கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையில் கடல் அலைகள் நிலத்தை நோக்கி வருவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பு அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலை நகர் மீது அந்நிய நாடுகள் கண்வைக்க முக்கிய வளங்களே காரணம்

## அருணி ஹேமச் சந்திரா கூறுகிறார்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை நகர் முக்கிய வளங்களை கொண்டு காணப்படுவதால் பல நாடுகள் கண் வைத்துள்ளன என தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருணி ஹேமச் சந்திரா தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

இந்தியா, சீனா ,அமெரிக்கா எந்த நாடாக இருந்தாலும் திருகோணமலை மீது கண் வைத்துள்ளன. தேசிய சொத்துக்கள் விற்பனை செய்து கொள்வது தொடர்பில் அரசாங்கத்தின் அசமந்த போக்கும் காரணமாக உள்ளது. சம்பூர் ,மற்றும் பெற்றோலிய வளம் .துறை முக ,சுற்றுலாத் துறை போன்றன இதற்குள் அடங்குகின்றன இந்த காணிகள் விற்பனை செய்யப்படுகிறது மக்கள் நலனுக்காக இன்றி அரசாங்கத்தின் தேவைக்காக இதனை செய்கிறார்கள். தேசிய மக்கள் சக்தி ஆட்சி காலத்தில் இது போன்ற விடயங்கள் நிறுத்தப்பட்டு மக்கள் ஆட்சி மலரும் . இந்தியாவின் ஆதிக்கம் தற்போது இங்கு வருகின்றமை தொடர்பில் மக்கள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது நாடு பாரிய கடனை பெற்று அதனை செலுத்த முடியாது இது போன்ற தேசிய சொத்துக்களை விற்பனை செய்து கடனை அடைக்க பார்க்கின்றனர் இதனை நடை முறைப்படுத்த அதற்கேற்ற ஆளுனரை நியமித்துள்ளார். முதலீட்டாளர்களுடன் சேர்ந்து பயணித்தாலும் மக்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். ஜனாதிபதிக்கு இருப்பது இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களே புதிய தேர்தல் வர இருக்கிறது. புதிய இரு ஆளுனர்களின் நியமனத்தால் மக்கள் மீது சுமைதான் உளளது.

வடமேல் மாகாணத்தில் ஹாபிஸ் நசீர்,தென் மாகாணத்தில் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்கள் முன்னாள் சுற்றாடல் அமைச்சர் முன்னாள் முதலமைச்சர் குற்றம் சாட்டப்பட்டவர்தான் இவர் கடந்த காலங்களில் தேவையற்ற விடயங்களுக்கு மண் அகழ்வுக்காக அனுமதி கொடுத்தவர். மூதூர் சாபி நகர் பகுதியில் மண் அகழ்வுக்காக தேவையற்ற விதத்தில் அனுமதி கொடுத்தவர் இவரை ஏற்றுக் கொள்ள முடியாது நீதிமன்றில் நாடாளுமன்ற பதவி பறிக்கப்பட்டு முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டவர். இவர் போன்றவர்களுக்கு ஆளுனர் பதவி வழங்குவது பொருத்தமற்றது எனவும் தெரிவித்தார்.

(05)

# பெண் கடத்தப்பட்டு பாலியல் கொடுமை: பிரதான சந்தேக நபர் உட்பட மூவர் கைது

உடுகம பகுதியில் 27 வயதுடைய பெண் ஒருவரைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என உடுகம பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் பெண்ணின் வீட்டிற்கு வந்து பெண்ணுடைய தாயாரின் கைகளைக் கட்டிவைத்து விட்டு காரில் பெண்ணை கடத்திச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

பெண்ணை கடத்திச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய 58 வயதுடைய பிரதான சந்தேக நபர் செல்லகதிர்காமம் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர் ரயில் ஓட்டுநராவார்.

அவருடன் வந்த ஏனைய மூன்று சந்தேக நபர்களும் காலி குருந்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட பெண் ஒரு குழந்தையின் தாய் என்பதுடன் இவர் கணவரைப் பிரிந்து வாழ்கிறார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

(05)

# சாலை கடலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட அறுவர் 3 படகுகளுடன் கைது

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு சாலை கடற்பகுதியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் வெள்ளிக்கிழமை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அறுவர் மூன்று படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படை கடற்பரப்பில் தொடர் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதன் ஒரு பகுதியாக கடந்த வெள்ளிக்கிழமை சாலை கடற்பகுதியில் வைத்து குறித்த ஆறுபேரும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களுடன் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் உடைமைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என கடற்படை தெரிவித்துள்ளது. (05)

# கட்டக்கலையுடன் கூடிய ஹோட்டல் வளாகமாகின்றது போகம்பரச் சிறை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்

*போகம்பர சிறைச்சாலையை ஹோட்டல் வளாகமாக மாற்ற தனியார் முதலீட்டாளர் முன்வந்திருக்கிறார். இதன் பழைமையைப் பாதுகாத்து அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.*

*போகம்பர சிறைச்சாலை 2014 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது.*

*மேலும், அந்த அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பெரிய கண்டி அபிவிருத்தித் திட்டம் மற்றும் கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இது மீள் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.*

*சிறைச்சாலையின் பிரதான கட்டடம் காலனித்துவ கட்டடக்கலையைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதோடு, பொது மக்களுக்கு திறந்த மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுடன் வளாகத்தின் பொருளாதார மதிப்பை அதிகரிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் மத்திய மாகாண பணிப்பாளர் இ.எம்.எஸ்.பி. ஏகநாயக்க தெரிவித்தார்.*

*தற்போதும் சிறைச்சுவர் மற்றும் பிரதான கட்டடம் தவிர மற்ற பகுதிகளின் அபிவிருத்திக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சிறைச்சாலை வைத்தியசாலை கட்டடத்தின் சீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன.*

*2018 ஆம் ஆண்டு வரை நகர அபிவிருத்தி அதிகார சபை சிறைச்சாலையின் முன்பகுதியை நன்கு பாதுகாக்கப்பட்ட*



*பழைய கட்டடத்துடன் கூடிய பூங்காவாக உருவாக்கியுள்ளது.*

*சிறைச்சாலையின் பிரதான வர்த்தகத் தொகுதி, உணவுக்கூடம், அருங்காட்சியகம் மற்றும் சுற்றுலா ஹோட்டல் உள்ளிட்ட வர்த்தகக் கட்டடமாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

*போகம்பர சிறைச்சாலை வளாகத்தின் கட்டடக்கலை மற்றும் வரலாற்று விழுமியங்களைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.*

*இதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையும் இலங்கை முதலீட்டு சபையும் இணைந்து தனியார் முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்துள்ளன. இது தவிர முதலீட்டாளர் தெரிவு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருவதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.*

*போகம்பர சிறைச்சாலை 138 வருடங்களாக செயற்பட்டு வந்துள்ளது. 2014ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி மூடப்பட்டு அதன் செயற்பாடுகள் பல்லேகலையில் உள்ள புதிய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டன.*

*போகம்பர சிறைச்சாலை தற்போது பொதுமக்களின் பார்வைக்காக மட்டுமே திறக்கப்பட்டுள்ளது.*

*போகம்பர சிறைச்சாலை கட்டுப்படுவதற்கு முன்னர், இலங்கை பிரித்தானியர்களின் காலனியாக மாறிய பின்னர், தற்போதைய கண்டி மத்திய சந்தைக்கு முன்னால் அமைந்துள்ள ஹெங்மேன்ஸ் ஹில் என்ற மலைப்பாதையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.*

*1876ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் போகம்பறை ஏரியை நிரப்பி சட்டத்தை அமுல்படுத்தும் நோக்கத்தில் இந்த சிறைச்சாலை கட்டப்பட்டது.*

*அரசாங்க திணைக்களத்தின் மூலம் அப்போது சிறைச்சாலை மற்றும் காவல் துறையின் பிரதான ஆணையாளராக இருந்த என்.ஆர். சோண்டர்ஸின் மேற்பார்வையில் இருந்தது. இந்த சிறைச்சாலை 92 கைதிகளின் உழைப்பில் 4 லட்சம் ஷரூபா நிதியில் கட்டப்பட்டுள்ளது.*

*இந்த நாட்டில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இரண்டு சிறைச்சாலைகளில் போகம்பறர சிறைச்சாலையும் ஒன்று. பரப்பளவு மற்றும் பாதுகாப்பில் இலங்கையின் இரண்டாவது இடத்தில் இருக்கும் போகம்பர சிறைச்சாலையில் ஒரே நேரத்தில் மூவர் தூக்கிலிடப்பட்டிருக்கலாம். 13 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து கிடக்கும் இங்கிலாந்து எடிம்பரோ ராணி விக்டோரியாவின் கிரீடத்தின் வடிவில், பிரான்ஸின் பரிஸ் பஸ்டில் கோட்டையைப் போன்றே கட்டப்பட்டது. இது 556 அடி நீளமும், 144 அடி அகலமும், 102 அடி உயரமும் கொண்டது.*

*இது 408 கைதிகளுக்குப் போதுமான 1080 கன அடி (10-12-9) கொண்ட 328 அறைகளைக் கொண்டுள்ளது.*

*போகம்பர சிறைச்சாலை ஒரு கட்டடக்கலை அடையாளமாகும். இது ஆசியாவிலேயே மிக நீளமான கட்டடமாகும். இங்கு 1876 முதல் 1975 வரை 524 குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.*

*1975ஆம் ஆண்டு நவம்பர் 21 மற்றும் 22 ஆகிய இரு தினங்களில் நாட்டையே உலுக்கிய முப்பதாவது கொலைக் குற்றவாளிகளான டபிள்யூ.ஜி.ரிச்சர்ட் மற்றும் டி.எம்.ஜயவர்தன ஆகிய இரு குற்றவாளிகள் தூக்கிலிடப்பட்ட பின்னர், போகம்பர சிறைச்சாலையில் இதுவரை மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.*

*எஹலேபொல குமாரிஹாமி நீரில் மூழ்கி சடலமாக கண்டெடுக்கப்பட்ட இடமும் இந்த சிறை வளாகத்திலேயே உள்ளது.*

*மேலும், உத்துவன்கன்தே சரதியல், மரு சிரா, கொல்வின் ஆர் டி சில்வா, பிலிப் குணவர்தன, வில்லியம் டி சில்வா போன்ற பிரபலங்களும் இங்கு சிறை வைக்கப்பட்டிருந்தனர்.*

*இதே போன்று உதுவன்கன்தே சரதியல், மரு சிறா போன்றவர்களும் கொல்வின் ஆர்.டி. சில்வா, பிலிப் குணவர்தன, வில்லியம் டி. சில்வா போன்ற பிரபல்யமான மனிதர்களும் இங்கு சிறைப்படுத்தப்பட்டிருந்தார்கள். சிறைச்சாலையாக செயற்படுகின்ற காலத்தில் அலங்காரப் பொருள்கள் உற்பத்தி, புளொக் கல் உற்பத்தி, பூ வளர்த்தல், சவர்க்காரம் செய்தல் மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்தி போன்ற தொழில்களும் அங்கு சிறைச்சாலையின் நலன்புரிப் பிரிவால் இங்கு செயற்படுத்தப்பட்டிருந்தன.*

*(05)*

# பொது வேட்பாளர் பற்றி பேசும் உங்களுக்கு சஜித் எதற்காகத் தூது அனுப்பவேண்டும்?

## கோவிந்தன் கருணாகரம் எம்பியிடம் மனோ கணேசன் கேள்வி

'மனோ மூலம் தூது விடாது எம்மிடம் நேரடியாக சஜித் கூற வேண்டும்' என தமிழீழ விடுதலை இயக்க நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி கூறி இருக்கின்றமை ஆச்சரியம் அளிக்கிறது. தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என மும்முரமாகச் செயற்படும் உங்களுக்கு எதற்காக சஜித் தூது விட வேண்டும் என எனக்குத் தெரியவில்லை. பொது வேட்பாளர் தொடர்பில் உறுதியான முடிவை எடுங்கள். முதலில் அதை செய்யுங்கள். அப்புறம் புறா விடு தூது, அன்னம் விடு தூது, மான் விடு தூது, தென்றல் விடு தூது என்பவைகளை பார்க்கலாம். சஜித்திடமும் பேசலாம்.

தன்னை சந்தித்த 'மக்கள்-மனு வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக தூதுக்குழு'விடம் சஜித் பிரேமதாஸ, தான் 13 ஆம் திருத்த மாகாணசபை சட்டத்தை முழுமையாக அமுல் செய்ய உள்ளதாகவும், அதுபற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்க இருப்பதாகவும், அதன் மூலம் சிங்கள மக்களின் ஆணையை பெற உள்ளதாகவும், எனது முன்னிலையில் உறுதி அளித்தார். மக்கள்-மனு வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக தூதுக்குழுவிடம் இதுபற்றி நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்பி கேட்டு அறியலாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர், கொழும்பு மாவட்ட எம்.பி மனோ கணேசன் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற, தமிழீழ விடுதலை இயக்க தலைவர் அமரர் சபா ரத்தினத்தின் நினைவேந்தல் நிகழ்வில், கோவிந்தன் கருணாகரம் எம்.பி, தமுகூ தலைவர் மனோ கணேசனை பற்றி வெளியிட்ட கருத்து பற்றி மனோ எம்பி மேலும் கூறியவை வருமாறு -



தனது இந்த நிலைப்பாடு பற்றி, சஜித் மே தினம் அன்றும் மீண்டும் ஒருமுறை கூறியுள்ளார். சஜித்தின் இந்த நிலைப்பாடு பற்றியே நான், எனது கிளிநொச்சி மே தின உரையில் தெரிவித்தேன். நான் கிளிநொச்சிக்கு, அங்கு நடைபெற்ற இலங்கை தமிழரசு கட்சியின் மே தின கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக, நண்பர் சிவஞானம் சிறிதரன் எம்.பியின் அழைப்பை ஏற்று வந்து கலந்து கொண்டேனே தவிர, சஜித்தின் தூதுவராக வரவில்லை. மேலும், எனது உரையில், 'நான் கிளிநொச்சிக்கு சஜித்துக்கு வாக்கு கேட்டு வரவில்லை', என்றும் கூட குறிப்பிட்டேன்.

மேலும், 13 ஆம் திருத்த மாகாணசபை முறைமையை வடக்கு கிழக்கு மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக நான் ஒருபோதும் கூறவில்லை. அப்படி நான் ஒருபோதும் கூறுவதும் இல்லை. ஆனால், 13 ஆம் திருத்த மாகாணசபை முறைமை என்பது இன்றைய அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டம். இது புதிதாக வருகின்ற ஒரு தீர்வு அல்ல. இன்று அரசியல் சட்டத்தில் இருப்பதை அப்படியே அமுல் செய்வதாகதான் சஜித் கூறி உள்ளார்.

மேலும் மாகாணசபை முறைமை என்பது வடக்கு கிழக்கு மாகாணங்களை மாத்திரம் சார்ந்தது இல்லை. அது ஒன்பது மாகாணங்களையும் சார்ந்தது. ஆகவே சஜித், வடக்கு கிழக்குக்கு மாத்திரம் அல்ல, முழு நாட்டுக்குமே இந்த உத்தரவாதத்தை வழங்கி உள்ளார் என்பதை தமிழ் கட்சிகள் அறிய வேண்டும்.

இப்படி சஜித் கூறுவதை போன்று, ஏனைய பெரும்பான்மை கட்சிகளின் உத்தேச ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களும் கூறுவார்களா என தமிழரசு கட்சி கேட்டு பார்க்க வேண்டும் எனவும் நான் என் உரையில் கூறினேன். அன்றைய கிளிநொச்சி இலங்கை தமிழரசு மே தின கூட்டத்தில், தமிழரசு தலைவர் அண்ணன் மாவை சேனாதிராசா, நண்பர் சிவஞானம் சிறிதரன் எம்.பி, மாகாணசபை அவை தலைவர் சிவஞானம் உட்பட பல தமிழரசு பிரமுகர்கள் அமர்ந்து இருந்தார்கள். பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு கொண்ட நண்பர் சீ. வி. விக்கினேஸ்வரன் எம்.பியும் இருந்தார்.

அன்றைய தினம் வரையிலும், இன்றும்கூட, இலங்கை தமிழரசு கட்சி தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் எந்த ஒரு நிலைப்பாடும் எடுத்து இருக்கவில்லை. ஆகவே எனது உரையில், சஜித் கூறியுள்ளதை போன்று ஏனைய முன்னணி வேட்பாளர்களும் கூறுவார்களா என கேட்டு பாருங்கள் என இலங்கை தமிழரசு கட்சி நண்பர்களை நோக்கித்தான் சொன்னேன்.

ஏனெனில், 13 ஆம் திருத்த மாகாணசபை முறைமை என்பது கையில் இருக்கும் குருவி. அதற்கும் மேலான தீர்வு என்பது மரத்தில் இருக்கும் குருவி. இன்றைய அரசியல் சட்டத்தில் இருப்பதை முதலில் அமுல் செய்தால்தானே, அதையடுத்து புதிய அரசியல் சட்ட தீர்வுக்கு போகலாம்?

மற்றபடி, நண்பர் கோவிந்தன் கருணாகரம், நண்பர் சீ. வி. விக்கினேஸ்வரன் ஆகியோர் இன்று ஆர்வத்துடன் முன்னெடுக்கும், தமிழ் பொது வேட்பாளர் என்ற யோசனையை மறுதலித்தும் நான் பேசவில்லை. தமிழ் கட்சிகளுக்கு, தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முழு உரிமை உள்ளது என்றுதான் கூறினேன். ஆனால், புதிய தீர்வு தொடரபில் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் எந்தவொரு சிங்கள வேட்பாளரும் எழுதி எல்லாம் கொடுக்க மாட்டார்கள் என்றும், அப்படி கொடுத்தால் அவர்கள் தெற்கில் சிங்கள வாக்காளர்களிடம் சிக்கலை எதிர்கொள்வார்கள் எனவும் எனது பட்டறிவில் பட்டதை சொன்னேன்.

மேலும், தமிழ் பொது வேட்பாளர் கோஷம் என்பது வடக்கு கிழக்குக்குக்கு மாத்திரம் பொருந்தும். மலையகம் உட்பட தென்னிலங்கைக்கு பொருந்தாது. ஏனெனில் வடக்கு கிழக்கு ஒரு தளம். மலையகம் உட்பட தெற்கு வேறொரு தளம். இதையும் எனது உரையில் கூறினேன்.

இவ்விடயங்கள் தொடர்பில், வரலாறு முழுக்க எனக்கு மிக தெளிவான யதார்த்தபூர்வமான நிலைபாடுகள் இருப்பதாக நம்புகிறேன். இதை நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி அறிய வேண்டும். என்னிடம் தடுமாற்றங்கள் கிடையாது. தடுமாற்றம் இருப்பது உங்களிடம்தான். முதலில் உங்கள் தெளிவான நிலைபாடுகளை கூடி கலந்து பேசி அறிவியுங்கள். அதன் பிறகு புறா விடு தூது, அன்னம் விடு தூது, மான் விடு தூது, தென்றல் விடு தூது என்பவைகளை பார்க்கலாம். - என்றுள்ளது. (05)

## வருடத்திற்கு 1,700 குழந்தைகள் தத்துக் கொடுக்கப்படுகின்றன

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக குழந்தைகளை தத்துக்கொடுக்கும் வீதம் அதிகரித்துள்ளதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்தில் சராசரியாக சுமார் 1,700 குழந்தைகள் தத்துக்கொடுக்கப்படுகின்றன என பதிவாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் தெரிவித்தார்.

அதிகளவான குழந்தைகள் வெளிநாட்டவர்களுக்கு தத்துக்கொடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது . பெற்றோர்கள் குழந்தைகளை வேறு நபர்களிடம் தத்துக்கொடுக்கும்போது அது குறித்து பதிவாளர் திணைக்களத்துக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளன.

பொருளாதாரச் சிக்கல்கள், திருமணத்துக்குப் புறம்பான உறவுகள் போன்ற சமூகப் பிரச்சினைகளாலே குழந்தைகளைப் பிறருக்கு தத்துக்கொடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது . நாட்டில் கருக்கலைப்புச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது . (05)

## சமுர்த்தி முகாமையாளர்கள் சங்க உப தலைவராக ஏ.சீ.அன்வர் தெரிவு

(எம்.எப்.றிபாஸ்)

அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் உபதலைவராக நிந்தவூர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ. அன்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பத்தரமுல்ல இசுகுருபாய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது இடம்பெற்ற அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் நிர்வாகத் தெரிவின் போதே நிந்தவூர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் மருதமுனையைச் சேர்ந்த ஏ.சீ.அன்வர் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் தலைவராகவும், பல்வேறுபட்ட பொது நல அமைப்புக்கள் மற்றும் விளையாட்டு கழகங்களில் உறுப்பினராகவும் இருந்து வருகிறார். (05)

## ஹொரணையில் துப்பாக்கிச் சூடு: சொகுசுகாரில் சென்றவர் காயம்

ஹொரண பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சொகுசு காரில் பயணித்த நபர் காயமடைந்து ஹொரண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் வட்டிக்கு கடன் வழங்குபவர் என தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது வாய் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என இதுவரை கிடைத்துள்ள தகவல்களில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

## பணப்பையை திருடிய பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கண்டியில் ஆடை விற்பனை நிலையமொன்றில் பெண்ணொருவரின் பணப்பையைத் திருடியதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கண்டி குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பணப்பையின் உரிமையாளர் கடந்த மாதம் 9 ஆம் திகதி பணப்பையைக் காணவில்லை எனக் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது, ஆடை விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமரா அமைப்பைக் கண்காணித்த பொலிஸார் பெண் ஒருவர் பணப்பையைத் திருடிச் சென்றதை அவதானித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் குறித்த பெண் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட போது , பொக்காவல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (05)

## அகில இலங்கை விஞ்ஞான போட்டி நிகழ்வில் மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி முதலிடம்!

(நூருல் ஹுதா உமர்)

'சிறந்த எதிர்காலத்திற்கான கல்வி' எனும் தொனிப் பொருளின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் தேசிய விஞ்ஞான அறக்கட்டளையால் எதிர்கால இலங்கைக்கான கல்வி எனும் தலைப்பின் கீழ் நடாத்தப்பட்ட பாடசாலை விஞ்ஞான போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)யில் தரம் 09 இருமொழி பிரிவில் கல்வி கற்கும் மாணவி பீனா தானீன் முஹம்மது நௌஷத் அவர்களினால் முன்வைக்கப்பட்ட கட்டுரையான 'சிறந்த எதிர்காலத்திற்கான கல்வி' என்ற கருப்பொருளில் ஆங்கில மொழி பிரிவின் கீழ் அகில இலங்கை ரீதியில் முதல் நிலையினைப் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



மாணவி பீனா தானீன் விதிவிலக்கான திறமை மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி, கடுமையான போட்டிகளுக்கு மத்தியில் தனித்து நின்று வெற்றி பெற்றுள்ளார். இந்த சாதனை பீனாவின் குறிப்பிடத்தக்க திறன்களை பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல், கல்வியில் புதுமை மற்றும் சிறந்து விளங்கும் எங்கள் கல்லூரியின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. உங்களின் வெற்றியால் கல்லூரி பெருமிதம் அடைகின்றது. ஆத்மார்த்தமான வாழ்த்துக்கள் என பாடசாலை அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார். (05)

## ஓ.எல்.தினம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)


கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. (சா.த) மாணவர் தின நிகழ்வு வியாழக்கிழமை மிகவும் கோலகலமாக நடைபெற்றது. பகுதித் தலைவர் இஸட்.எம். நூறுல் அமீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் பிரதம அதிதியாகவும் பிரதி அதிபர் எம்.எச்.எம். ஜிப்ரி, மௌலவி எம்.ரி.ஏ. முனாப் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் 'நயனம்' எனும் பெயரில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

பாடசாலையின் ஏனைய பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களும் இதில் பங்கேற்றிருந்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவின் 39ஆவது குரு மகாசன்னிதான ஆதீன பீடாதிபதி சுவாமி இலங்கை வருகை





(வி.ரி. சகாதேவராஜா)

இந்தியாவின் ஸ்ரீமத் பரசமய கோளறி நாதர் ஆதீன 39 ஆவது குரு மகா சன்னிதான பீடத் தலைவர் புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார் . அவர் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வட மாகாணம் பூராக 9 நாள் விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருக்கின்றார்.

முதல் நாள் விஜயம் அம்பாறை மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

அச்சமயம், முதலில் கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம், வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலயம்,

வளத்தாப்பிட்டி பளவெளி சிவன் ஆலயம் , மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம், படுகொலை இடம் பெற்ற திராய்க்கேணி மாரியம்மன் கோவில்,

மாணிக்கமடு பிள்ளையார் ஆலயம்,ஆலங்குளம் சிவன் ஆலயம் ,

செங்காமம் பிள்ளையார் ஆலயம் போன்ற பின்தங்கிய எல்லைப்புற பாதிக்கப்பட்ட ஆலயங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமை பற்றி ஆராய்ந்தார்.

அவருடன் லண்டன் கற்பகப்பிள்ளையார் ஆலய சபையின் இலங்கைக்கான இணைப்பாளரும் இலங்கை அகிலன் பவுண்டேசனின் உதவிப்பணிப்பாளருமான கலாநிதி விஆர். மகேந்திரன், அம்பாறை மாவட்ட சமய ஆர்வலர்களான முன்னாள் தவிசாளர் கலாநிதி கே.ஜெயசிறில், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, சமூக செயற்பாட்டாளர் தா. பிரதீபன் ஆகியோரும் சுவாமிகளின் இந்திய பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

குறித்த ஆலயங்களின் வரலாறு தேவைகள் தொடர்பாக அந்தந்த ஆலய பரிபாலன சபையினருடன் கலந்துரையாடப் பட்டது. (05)

## போதைப்பொருள் கடத்தலுக்காக புதிதாக பலர் இணைந்துள்ளதாகப் பொலிஸாருக்குத் தகவல்

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதற்காகப் புதிதாகப் பலர் இணைந்துள்ளனர் எனப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால நடவடிக்கைகளில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் வருமானத்தை ஈட்ட முடியும் என்பதற்காகப் போதைப்பொருள் கடத்தலில் பல புதிய கடத்தல்காரர்கள் இணைந்துள்ளனர் எனப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பல புதிய கடத்தல்காரர்களைக் கைது செய்வது இலகுவான விடயமல்ல என பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் புதிய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவிலோ, பொலிஸ் பிரிவிலோ எவ்வித தகவலும் இல்லாததால் இவர்களைக் கைது செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது .

அத்துடன், ஒழுங்கமைக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பிலும், புதிய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இணைந்துள்ளனர்.

இந்த புதிய கடத்தல்காரர்கள் டுபாயில் இருந்துகொண்டு கடத்தலில் ஈடுபட்டு வருவதும் தெரிய வந்துள்ளது .

அண்மைய நாள்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படை, போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் பொலிஸாரால் நடத்தப்பட்ட பாரியளவிலான போதைப்பொருள் சோதனைகளில் கைதுசெய்யப்பட்ட பெரும்பாலான கடத்தல்காரர்கள் புதிய கடத்தல்காரர்கள் எனத் தகவல் வெளியாகியுள்ளன. (05)

## 2 மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி இரு இளைஞர்கள் சாவு




கிம்புலாவல பிரதேசத்தில் புதிய வைத்தியசாலை வீதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிக்கொண்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது .

மிரிஹான , மாதிவெல பிரதேசங்களைச் சேர்ந்த 18 மற்றும் 20 வயதுடைய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இருவரையும் ஜெயவர்த்தனபுர மற்றும் கலுபோவில வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் இவர்கள் உயிரிழந்தனர் .

மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களின் கவனக்குறைவே இந்த விபத்துக்கான காரணம் என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர் . (05)

## மட்டு. ஆலயங்களில் திருட்டுசம்பவம்: இருவர் கைது இருவர் தலைமறைவு

### சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு நகரில் ஆலயங்களின் கதவுகளை உடைத்து மின்பிறப்பாக்கியில் உள்ள செம்புக்கம்பிகளையும் குத்துவிளக்குகளையும் திருடிவந்த சம்பவம் தொடர்பில் முன்னதாக கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் பொலிஸாருக்கு கொடுத்த தகவலுக்கமைய, மேலும் இருவர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

இந்த திருட்டுக் குற்றத்தில் கைதான சந்தேக நபர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் சனிக்கிழமை உத்தரவிட்டார்.

கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள திராய்மடு பகுதியிலுள்ள மின்சார சபைக்கு சொந்தமான மின்பிறப்பாக்கிகளில் பொருத்தப்பட்டிருந்த செம்புக் கம்பிகள் கடந்த 2022-23 ஆண்டுகளில் திருடப்பட்டு வந்தன என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி பிரதேசத்தில் ஆலயங்களில் குத்துவிளக்குகள், மின் பிறப்பாக்கிகளில் உள்ள செம்புக் கம்பிகளை திருடியமை தொடர்பாக 26 வயதுடைய இரு இளைஞர்களை பொலிஸார் கைது செய்து விசாரித்து வந்தனர்.

செப்பு திருட்டு கும்பலைச் சேர்ந்த திராய்மடு பகுதியைச் சேர்ந்த மேலும் 4 பேருடன் இணைந்தே இருவரும் மின்பிறப்பாக்கிகளின் செப்புக் கம்பிகளையும் குத்துவிளக்குகளையும் திருடியமை விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, திருடப்பட்ட மின்பிறப்பாக்கிகளிலுள்ள செப்புக் கம்பிகள், ஆலயங்களிலுள்ள செம்புப் பாத்திரங்கள், குத்துவிளக்குகளை விற்றுவிட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின்போது ஒப்புக்கொண்டுள்ளனர்.


இந்த இருவரும் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் செம்பு திருட்டுக் குழுவைச் சேர்ந்த மேலும் 4 பேரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

அவ் வேளை, திராய்மடுவைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்ததுடன், திருடப்பட்ட செப்புக் கம்பிகளை ஏறாவூர் பிரதேசத்திலுள்ள பழைய இரும்பு விற்பனை கடையொன்றில் உருக்கிய நிலையில் கைப்பற்றியுள்ளனர்.

அத்தோடு, நால்வரில் இருவர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்நிலையில் கைதான சந்தேக நபர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (05)

## சுதுமலை புவனேஸ்வரி அம்மன் மகோற்சவம்



எதிர்வரும் குரோதி வருடம் 6 ஆம் திகதி வரலாற்று சிறப்பு மிக்க சுதுமலை அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறும். 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அதனை தொடர்ந்து 23டி ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். மகோற்ச வத்தின் போது பக்த அடியார்கள் பழம், பால், பூ, இளநீர், பூமாலை போன்ற அபிஷேகப் பொருள்களைளக் கொண்டு வருவது நல்லது. (05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.05.2024இல் வெளியிடப்பெற்றது